# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 147/2019 நாள்.06.11.25

## DW1- திரு.வில்சன் த/பெ. திரு. மரியதாஸ்

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

பி.சா.ஆ.8 முதல் 12 ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வெளிநாட்டிலிருந்து வீடுகட்ட பணம் கொடுத்தேன் என்பதை காண்பிக்க. மேற்படி பணத்தை நான் யாருக்கு அனுப்பியதாக சொல்கிறேன் என்றால் அப்பாவுக்கு. நான் அனுப்பியதாக சொல்லுகியறேனே அதில் என் கையெழுத்து உள்ளதா என்றால் அனுப்பியவர் என்று என் பெயர் உள்ளது. என் அப்பா பெற்று கொண்டதற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பி.சா.ஆ.9 ஆவணத்தில் மேலே 12.4.1992 என்றும் கீழே சீலில் 12.7.1992 என்றும் உள்ளது என்றால் ஆமாம். நான் பணம் செலுத்தியதாக சொல்லபடும் ஆவணங்களில் என் கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். பி.சா.ஆ.8 முதல் 12 ஆவணங்கள் காலகட்டத்தில் இடம் வாங்கப்படவில்லை என்றும் வீடு கட்டப்படவில்லை என்றும் அதற்கு முன்பாகவே வீடு கட்டபட்டது, இடம் வாங்கபட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ. 12 ஆவணத்தில் சேர்மன் பெயர் சரியாக இல்லை என்றால் சரியல்ல. சேர்மன் பெயர் E.L.ஷேக் கலித் பின்அப்துல்லா பின் சுல்தான் அல் குசாமி என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.12 நான் வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 இல் உள்ள துறைமுகத்தின் எம்பளம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 முதல் 12 ஆவணம் முதலில் தாக்கல் செய்யாததற்கு என்ன காரணம் என்றால் அப்போது என் கையில் இல்லை பின்பு தேடி பார்த்தபோது கிடைத்தது. ஆவணங்கள் அனைத்தும் அங்கு எனக்கு கொடுக்கபட்டிருந்தால் நான் முதல்விசாரணையின்போது தாக்கல்செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணம் என்னிடம் உள்ளதாக என்னுடைய முந்தைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 முதல் 12 ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மற்ற சகோதரர்களை ஏமாற்றுவதற்காக நானே உருவாக்கி தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**